# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, செத்தெம்பர் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ.– (கூட்.) 37/2005

### இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றம்" என அழைக்கப் படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று, அம்மன்றத்தின் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கமைய, அம்மன்றத்துடன் தொடர்புடைய விடயங்களையும், குறிக்கோள் களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத் துக்காக இரத்தினபுரியில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட மன்றமானது எக்குறிக்கோள்களுக்காகவும், விடயங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ, அக்குறிக்கோள்களையும் விடயங்களையும் சொல்லப்பட்ட மன்றம் இதுவரை வெற்றிகரமாக பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தி வந்துள்ளதாதலாலும் சொல்லப்பட்ட மன்றம் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ள தாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றத்தில் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்களான அத்தனை ஆட்களும், இத் தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தில் இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் உறுப்பினர்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட, ஒரு கூட்டிணைக்கப்பட்ட இரத்தினபுரி, மாரபன சாஸ்த்ரோதய மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

2 –PL. 002227– 1,065 (2007/07)

குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் எப்பொதுக் குறிக்கோள்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதோ அவை பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) கல்விசார் வசதிகள் போதாததாகவுள்ள அல்லது கிடைக்கக்கூடியதாக இல்லாத பிரேதசங்களில் முன்பாடசாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் உட்பட சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான கல்விசார் நிலையங்களைத் தாபித்தல் ;

(ஆ) மக்களிடையே சமாதானத்தையும், சமாதானக் கூட்டு வாழ்வையும் மேம்படுத்தல் ;

(இ) இலங்கைச் சமூகத்தின் அறிவியல் மற்றும் கலாசார முன்னேற்றத்திற்காக வேலை செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் இதையொத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றல் ;

(உ) சுயதொழிலில் ஈடுபடுவதற்கு இளம் ஆட்களுக்கு பணரீதியானதும், வேறு உதவிகளையும் ஏற்பாடு செய்தல்;

(ஊ) இளம் ஆட்கள் தம்மை விளையாட்டில் பயிற்சி செய்வதற்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(எ) குறிப்பாக இளம் ஆட்களுக்கு கலந்துரையாடல்கள், மகாநாடுகள், வாதாட்டங்கள் மற்றும் இதையொத்த செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் ;

(ஏ) மக்களிடையே கல்வியறிவை மேம்படுத்தும் நோக்கில் புத்தகங்களையும், நாளிதழ்களையும் சேர்த்தலும், விநியோகித்தலும் அத்துடன் வாசிகசாலை வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஐ) இளம் ஆட்கள் தமது உள்ளார்ந்த சாமர்த்தியம் மற்றும் திறமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான வசதிகளையும், ஊக்கப்படுத்தல்களையும் ஏற்பாடு செய்தல் ;

(ஒ) இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் கைவிடப்பட்ட ஆட்களின் சேமநலன் மற்றும் பாதுகாப்பிற்காக நிலையங்களைத் தாபித்தலும், பராமரித்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**4.** இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன், பிணைப்பொறுப்பின்றிப் பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதியினை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் உள்ளடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் பின்வருவோரைக் கொண்டுள்ள செயற்குழுவினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுத் தலைவர், துணைத் தலைவர்,

செயலாளர் ஒருவர், ஒரு உதவிச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஒருவர் என்போரைக் கொண்டுள்ள நிறைவேற்றுக் குழு ;

(ஆ) பதின்மூன்று குழு உறுப்பினர்கள் ; அத்துடன்

(இ) (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப்பட்ட பிரபலமான மூன்று ஆட்களை உள்ளடக்கிய ஆலோசனைச் சபையொன்று.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டுள்ள மன்றமே கூட்டுத்தாபனத்தின் முதலாவது செயற்குழுவாகவிருத்தல் வேண்டும்.

*விதிகளை ஆக்குவதற்கான தத்துவங்கள்.*

**6.** கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக் கொண்டு உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும் வேலைக் குழுவினதும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு உத்தியோகத்தர்களினதும், முகவர்களினதும் கடமைகள் பற்றிய நடத்தை என்பவற்றுக்காகவும் கூட்டத்தின் அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைக்காகவும், அத்துடன் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தினதும் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்கும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் கொடைகள் இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, அறுதி மாற்றம், நன்கொடை அல்லது உதவு தொகை மூலம் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் செயற்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகள், கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் செயற்படுத்துவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால்

உறப்படும் எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

மன்றத்தால் அல்லது மன்றத்திற்கு செலுத்தப்படற் பாலனவான கடன்கள்.

**8.** இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று உள்ள மன்றத்தின் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவாயுள்ள எல்லாக் கடன்க ளும், மன்றத்திற்குச் செலுத்தப்படவுள்ள எல்லாச் சந்தாப் பணங்க ளும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கணக்குகளும், கணக்காய்வும்.

**9.** (1) செயற்குழுவானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட அல்லது செலவு செய்யப்பட்ட எல்லாப் பணத்தொகைகளுக்கும் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு தடவையாவது பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப் படுதல் வேண்டும். அத்துடன் வருமானச் செலவுக் கணக்கு ஐந்தொகையின் சரியாந்தன்மை இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர்களாகவுள்ள கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களால் சான்றுப்படுத்தப்படல் வேண் டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றதி காரம் பெற்ற தலைவர் அல்லது செயலாளர் அல்லது பொருளா ளர் அத்துடன் செயற்குழுவின் யாரேனும் ஒரு உறுப்பினரின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாதென்பதுடன், தாம் பிரசன்னமாயிருந்ததற்கு அடையாளமாக அவர்கள் அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அவ்வாறு கையொப்ப மிடுதல் சாட்சியாளராக எவரேனும் ஒருவர் கையொப்பமிடுவ தற்குப் புறம்பானதாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**11.** கூட்டுத்தாபனமானது, சட்டத்திற்கமைய ஏதேனும் கொள் வனவு, அன்பளிப்பு, நன்கொடை, மரணசாதனக் கையுதிர்ப்பு அல்லது வேறுவகையாக கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படு கின்ற எவையேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்

தைக் கையேற்பதற்கும், வைத்திருப்பதற்கும் திறமை கொண்டதாதலும் இயலுமானதாதலும் வேண்டும். மேலும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய அத்தகைய ஆதனங்களை விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்குக் கொடுப்பதற்கும், கொடுத்து மாற்றுவதற்கும் மற்றும் வேறுவகையில் கையுதிர்ப்பதற்குமான முழுத்தத்துவத்துடன் அவற்றைக் கையேற்பதற்கும் வைத்திருப்பதற்குமான ஆற்றலையும் தத்துவத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கலைக்கப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளால் தடை செய்யப்பட்டுள்ளதோ அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கைமாற்றப்படலாம்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினதும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் அல்லது வேறெவரேனும் ஆட்களதும் உரிமைகளையேனும் பாதிப்பதாகவோ பங்கப்படுத்துவதாகவோ இருத்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்